அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்லும்பொழுது, அவ்விருவர் மட்டும் புரிந்துகொள்ளக்கூடிய முறையில் பதில் சொன்னதாகத் தோன்று கிறது. அம்மாதிரி, சபையில் இருவருக்கு மட்டும் தெரிகிற முறையில் கேள்வி கேட்பதும், பதில் சொல்வதும் முறைதானு ? இது முன் உதாரண மாக ஆகிவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் இரண்டு பேர்களுக்கு மட்டும் தெரியும் மாதிரி பேசிக்கொள்ளவில்லை. இரண்டு பேர்களும் மைக் மூலம்தான் பேசினுர்கள். அவர்கள் இரண்டு பேர்கள் மட்டும் புரிந்து கொள்ளும்படி பேசவில்லை. எல்லோரும் புரிந்துகொள்கிற முறையில் தான் பேசியிருக்கிறுர்கள்.

3. கவன ஈர்ப்பு.

(அ) பொதுவுடைமை தீவிரவாதிகளின் (நக்சல்பாரிகள்) திடீர்தாக்குதலைச் சமாளிக்க காவல் நிலையங்களை வலுப்படுத்தல்

THIRU N. S. V. CHITHAN : Sir, under Rule 41 of the Assembly Rules, I wish to call the attention of the Hon. the Chief Minister to a matter of urgent public importance namely, the steps taken by the Government to strengthen the police stations to meet the surprise attacks by the Naxalites in the State.

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, 1968, நவம்பர் 22, 24-ம் தேதிகளில் கேரள மாநிலத்திலுள்ள தெற்கு வயநாட்டில் தலைச்சேரி காவல்நிலையத்திலும் பூல்பள்ளி கம்பியில்லாத் தந்தி நிலையத்திலும் அம்மாநிலத்தைச் சேர்ந்த பொதுவுடைமைத் தீவிர வாதிகள் (நக்சல்பாரிகள்) தாக்குதல் நடத்தியதன் விளைவாக, நமது மாநிலத்திலுள்ள பொதுவுடைமைத் தீவிரவாதிகளின் செயல்களைக் கூர்ந்து கண்காணிக்குமாறு இம் மாநிலத்திலுள்ள காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் அனைவருக்கும் காவல் துறைத் தலைமை அதிகாரி உத்தரவு பிறப்பித்துள்ளார். கேரள மாநிலத்தின் எல்லைப் புறமுள்ள எல்லாப் பகுதிகளிலும் படைக்கலன் தாங்கிய காவல் படையினர் அமர்த்தப்படுதல், எல்லைப்பகுதியை கூர்ந்து கண்காணித்தல் போன்ற சிறப்பான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தீவிரவாதி கள் வன்செயல்கள் எதிலும் ஈடுபட வாய்ப்பு அளிக்காத வண்ணம் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) கல்லூரிகளும், உயர்நிலைப் பள்ளிகளும் அடிக்கடி மூடப்படுதலும் நிலைமைக்களைச் சமாளிக்க முதல்வர்களுக்கு சுதந்திரம் அளித்தலும்

DR. H. V. HANDE : Sir, I wish to call the attention of the Hon. Minister for Education and Industries to a matter of urgent public importance, namely the frequent closure of the colleges and high schools in the State of Tamil Nadu for the past few months and the need to give frtedom for the Principals to handle the situation according to the merits of each case.

* **மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் மாணவர்களிடையே எழும் ஒழுங்குப் பிரச்னைகளைத் தீர்க்க கல்லூரி முதல்வர்கள், தலைமை ஆசிரியர்களுக்கு முழுச் சுதந்திரம் உண்டு. அதில் அரசு தலையிடாது.

சில வேளை மொழிக்கொள்கை போன்ற உணர்ச்சிகளுக்கு இடம் தரும் கொள்கைப் பிரச்சினைகளில் மாணவர்கள் ஈடுபடும்பொழுது அது கல்விக் கூடங்களுக்கு வெளியே வந்துவிடுகிறது. அப்போது நிதானத்துடனும், சிந்தனையுடனும் ஒழுங்குப் பிரச்சினைகளை அணுக வேண்டும்.

எத்தகைய வன்முறைச் செயல்களும் நேரிடாது தடுக்க முயற்சிகள் எடுக்க நேரிடுகின்றது. கல்லூரிகள், பள்ளிகள் மூடுவது மாணவர்களின் படிப்பையும் எதிர் காலத்தையும் மிகவும் பாதிக்கும். தவிர்க்க முடியாத

சில சந்தர்ப்பங்களில் வேறு வகை வன்முறைச் செயல்கள் மிகுதியாக விளையாது தடுக்க, மாணவர்களது உணர்ச்சியை சமூக விரோத சக்திகள் பயன்படுத்த இடம் தராத சூழ்நிலையை உருவாக்க, சில நேரங்களில் விடுமுறை தரும்படி நேரிடுகின்றது. இவ்வகையான சந்தர்ப்பங்கள் நேரிடுவதைத் தடுக்க எல்லா முயற்சிகளும் எடுக்கப்படும்.

தமிழக மாணவர்கள் தமிழ்ப் பண்பாட்டில் சிறந்தவர்கள், சீரிய சிந்தனைத் திறன் படைத்தவர்கள். ஆகவே, சந்தர்ப்பவாதிகள், சமூக விரோத சக்திகள் ஆகியோரது முயற்சிகளுக்கு இடம் தராது தங்களுடைய கல்வி எதிர்கால நலன், தமிழ் நாட்டின் எதிர்கால நலன் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு அரசியல், சமுதாய, மொழிப் பிரச்சினைகளை அரசிடத்திலே, நாட்டின் தலைவர்களிடத்திலே ஒப்படைத்துவிட்டு கல்வியில் தங்கள் கவனத்தை செலுத்த முயல்வார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

ஆசிரியர்களும் பெற்றோர்களும் மாணவர்களது நல்வாழ்வுக்கு வழி காட்ட வேண்டும். அரசியல் கட்சிகள், கட்சி நலனை மறந்து மாணவர் களது எதிர்கால நல்வாழ்வையும், நாட்டின் நலனையும் கருத்தில் கொண்டு செயல்படவேண்டும். மாணவர்களுடைய உள்ளத்து உணர்ச்சிகளைப் புரிந்து உடனுக்குடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு மாணவர் பிரச்சினை களைத் தீர்க்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

Dr. H. V. HANDE: While welcoming the reassuring statement which the Chief Minister made, I want elucidation on one point. A few months ago the Director of Public Instruction sent instructions to the Principals of many colleges asking them to close the colleges for a few days without consulting the Principals concerned. Though the Principals were not interested in closing the colleges, such are order was passed. Hereafter at least will the Minister instruct the officers not to blindly issue a blanket order but find out from each college whether the situation warrants closure from the point of view of law and order, so that the onus will be on the Principals of the colleges.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது எந்த ஆணை என்று தெரியவில்லை. பொதுவாக ஆலோசனைகள் கூறப்படுகின்றன, கல்லூரி முதல்வர்களுக்கு. அவர்கள் சூழ்நிலைக்கு தக்கவாறு செயல்படுகிறார்கள். வன்முறைகள் தவிர்க்கப் படவேண்டும் என்பதுதான் கருத்து. நாங்கள் ஆலோசனைகள் தான் கூறுகிறோம்.

(4) 1969-70-ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. டி. மார்டின்:** பேரவைத் தலைவர் அவர்களே, 1969-70-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை பற்றி என் கருத்துக்கள் சிலவற்றை இந்த அவையில் வைக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. மதியழகன் அவர்கள், தன்னுடைய நிதிநிலை அறிக்கையில் மறைந்த முதலமைச்சரால் இவ்வரசின் மீது சாற்றப்பட்ட கொள்கைகளை இயன்ற அளவு நிறைவேற்ற முயல்வோம் என்று கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள், காலஞ்சென்ற முதலமைச்சர் திரு. அண்ணாதுரை அவர்களின் கொள்கை வழி நடப்போம் என்றும் கூறியிருக்கிறார்கள். மக்களும் இந்த மாமன்றமும் அறிந்தவரையில், காலஞ்சென்ற முதல் அமைச்சர் திரு. அண்ணாதுரை அவர்கள் முதலமைச்சர் என்ற முறையில் மிகவும் உறுதியாக ஒரு கொள்கையைக் கடைப்பிடித்து வந்தார். அது